DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-8/2021

Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.நாச்சம்மை | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused absent. Petiton filed U/s.317 Cr.P.C and allowed.)

08.05.2025– 01.10 PM

<u>முதல் விசாரணை</u>:-

1. நான் ஓரிவயல் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பவத்தில் இறந்து போன சந்தானம் எனது அப்பா. எனது அப்பா கருங்குளம் கிராமத்தில் குடியிருந்து அவருக்கு சொந்தமான ஆடுகளை வளர்த்து வாழ்க்கை நடத்தி வந்தார்.

2. சுமார் 4,5 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் நான் ஊரிலிருந்த போது மாலை சுமார் 06.30 மணியளவில் கடலாடி காவல் நிலையத்திலிருந்து போலீசார் எனது அப்பா கடலாடி போஸ் ஆபிஸ் அருகில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த போது வண்டி இடித்து கீழே விழுந்து கிடப்பதாக தகவல் சொன்னார்கள். நான் சுமார் 07.00 மணியளவில் கடலாடி அரசு மருத்துவமனை சென்று எனது அப்பாவை பார்த்தேன். எனது அப்பா பின் தலையில் காயம்பட்டு பேச முடியாத நிலையில் இருந்தார்.

3. நான் விசாரித்தபோது எனது அப்பா கடலாடி தாலுகா அலுவலகம் முன்பு ஆடுகளை மேய்த்து விட்டு வரும் போது வாகனம் மோதி விட்டதாகவும் காயம்பட்ட எனது அப்பாவை ஆட்டோவில் ஏற்றி கடலாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்ததாக

சொன்னார்கள். பின்னர் மேல் சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு சொன்னார்கள். எனது அப்பாவின் நிலைமை படு மோசமாக இருந்ததால் காயம்பட்ட எனது அப்பாவை எங்கள் வீட்டிற்கு கொண்டு சென்றோம்.

4. அன்று இரவு 10.00 மணியளவில் எனது அப்பா இறந்து விட்டார். பின்னர் எனது அப்பா இறந்தது குறித்து கடலாடி காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னோம். பின்னர் நான் காவல் நிலையம் சென்று சம்பவம் குறித்து புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் கொடுக்கப்பட்டது. அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். எந்த வாகனம் யார் ஓட்டி வந்த வாகனம் என்றும், எந்த வாகனம் என்றும், ஓட்டி வந்த நபர் குறித்தும் எனக்கு தெரியாது. என்னை போலீசார் விசாரித்தார்கள் .

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

நான் எனது அப்பா இறந்தது சம்மந்தமாக புகார் மனு கொடுத்தேனா, அல்லது புகார் வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் புகார் வாக்குமூலமாக தான் கொடுத்தேன். ரவி என்பவர் எனது கணவர் ஆவார். சாட்சிப்பட்டியலில் உள்ள கன்னிச்சாமி என்பவரை எனக்கு தெரியாது. சாட்சிப்பட்டியலில் உள்ள மலைச்சாமி என்னுடைய ஊரைச் சேர்ந்தவர். சம்பவத்தில் ஈடுபட்ட வாகன எண்ணோ, வாகனமோ எனக்கு தெரியாது.

நான் புகார் வாக்குமூலத்தில் சம்பவத்தில் ஈடுபட்ட வாகனம் லேசாக மோதி எனது அப்பா கீழே விழுந்து விட்டார் என்று குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. புகார் வாக்குமூலத்தில் சம்பவம் மாலை 05.00 மணிக்கு நடந்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். சாட்சிப்பட்டியலில் உள்ள கருப்பசாமி எனது ஊரைச் சேர்ந்தவர். நான் எனது அப்பா இறந்தது சம்மந்தமாக நஷ்ட ஈடு கோரி நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் நஷ்ட ஈடு

கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தற்சமயம் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சம்பவத்தில் ஈடுபட்ட வாகனமோ, எதிரியோ எனக்கு நேடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று இரவு 10.00 மணிக்கு எனது அப்பா இறந்து விட்டதாக புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன். சந்தேகத்தின் பேரில் கடலாடி சார்பு ஆய்வாளர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கைக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி